உட்காரமாட்டேன் என்கிறார். துணைத் தலைவர் சுந்தரராஜ் அவர்கள் அங்கேயே உட்கார்ந்து இருக்கிறார், இங்கே வந்து உட்காரமாட்டேன் என்கிறார். ஒருவேளை நீங்கள்தான் தடுக்கிறீர்களோ என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் யாரையும் தடுக்கிற மாதிரி இல்லை. எல்லோரையும் முன்னுக்குக் கொண்டு வந்து விடலாம். ஆனால் முன்னாலே இடம் இல்லை. இப்போது தான் திரு. ஹாஜாசெரிப் அவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இனிமேல்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது அவர்கள் கட்சியின் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னுக்கு வரவேண்டும் என்பதிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை நான் வரவேற்கிறேன், அதற்காக நன்றி கூறுகிறேன். அவருடைய ஆசை விரைவில் நிறைவேறும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். எந்தக் கட்சியிலே யார் தலைவர், யார் உபதலைவர் என்பது அவர்கள் இன்டர்னல் மேட்டர், ஆனால், ஒன்ஸ் இட் இஸ் டேக்கன்–அந்த ரைட் கொஸ்டின் அவையிலே வருகிறபோது நான் கட்சி பார்க்க மாட்டேன். எந்தக் கட்சியானாலும் அவுக்குள்ள ரைட்ஸ் என்கிறபோது I am out for defending. ஒருவேளை அவரை நீங்கள் உட்கார விடமாட்டேன் என்று சொல்லி விட்டீர்களா என்பதற்காகக் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லவேளையாக என்மீது குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். அதை நான் தாங்கிக் கொள்வேன்.

(இ) உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதி.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தாங்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்துள்ளீர்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட பொருள் இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டது என்று பல பத்திரிகைகளில் 20–ந் தேதி செய்தி போடப்பட்டிருக்கின்றது. இது எந்த வகையிலே பொருத்தமானதாக ஆகிறது என்பதும் (குறுக்கீடு) அதேபோல 246 வது விதியின் கீழ் அவையிலே நடந்து கொண்டு இருக்கின்ற பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்ப விழைகிறேன்.

1982 ஏப்ரல் 3] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

20-3-1982 அன்று வடபழனி கோவில் சம்பந்தமாக இந்த அவையிலே பேசிய கருத்தும், இன்று அவர் கவனஈர்ப்பு தீர்மானமாக கொடுத்திருக்கின்ற கருத்தின் அடிப்படையிலும் தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையிலே அவர் மீது உரிமைப் பிரச்சினையை எழுப்ப எனக்கு விதி 246-ன் கீழ் அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு என்ன பதில் வருகிறது என்று பார்த்து அதற்குப் பிறகு தான் கொடுக்க முடியும். (குறுக்கீடு) வாசகத்திலே என்ன தவறு என்று நான் பின்னாலேதான் கேட்க முடியும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் சொல்கிறபோது * * * என்று சொன்னார்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டு விட்டன. (குறுக்கீடு) அதைத் தொடர்ந்து ஏதாவது இருந்தாலும் அதுவும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படும்.

(முற்பகல் 10.30)

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின்கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எஸ். ஆண்டித் தேவர், ஆர். கிருஷ்ணன், டி. மணி, என். பழனிவேல், எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, ஏ. டி. கருப்பையா, உ. சுப்பிரமணியன், கே. கல்லன், ஆர். தியாகராசன், ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், இரெ. இராசமாணிக்கம், சோ, அழகர்சாமி, எம். அப்பாதுரை, ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். பி. சுந்தரம், வி. கிருஷ்ணமூர்த்தி, பி. மொக்கையன் இ. முத்தராமலிங்கம், பி. எம். தங்கவேல்ராஜ், என். சங்கரய்யா பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கு. ரமணி, ஜே. எஸ். இராசு, மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி, செ. இராமலிங்கம், எஸ். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன், என். வரதராஜன், என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, அ. ரகுமான்கான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.